RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI:10.34256/irjt22252

OPEN ACCESS

# ஜெயமோகன் புதினங்களில் இயற்கைக் குறித்த சிந்தனைகள்

மா. வள்ளி [அ, *], தி. முத்து [அ]

[அ] முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை, அரசு ஆடவர் கலைக்கல்லூரி, கிருஷ்ணகிரி - 635 001 இந்தியா.

# Thoughts on Nature in Jayamohan's Novels

M. Valli [a, *], T. Muthu [a]

[a] PG and Research Department of Tamil, Government Arts College for Men, Krishnagiri – 635 001, India

* Corresponding Author: vallim1312@gmail.com

Received: 05-01-2022
Revised: 03-04-2022
Accepted: 12-04-2022
Published: 30-04-2022

Check for updates

## ABSTRACT

Jayamohan has described in his works the origin of resources considered natural in the world and the benefits that humans can obtain from nature. He has described the natural objects that appear naturally in the world, such as the five elements, the universe, mountains, rivers, sand, rivers, sounds, and flowers, in various places in his novels with beautiful feelings. This research article is an explanation of these natural concepts.

**Keywords:** Universe, Mountain, River, Sand, Sound, Flower

## முன்னுரை

இயற்கைப் பொருள்கள் மனிதன் தோன்றாப் பன்னெடும் காலத்தே தோன்றியது. நிலத்தோற்றமும் வான் தோற்றமும் இயற்கையின் களன்களாகும். மனிதன் தோன்றாப் பன்னெடுங்காலமாக நிலவி வருகின்ற இத்தோற்றங்களின் அனைத்தும் இயற்கையாகும். மலை, கடல், காற்று, மண், மரம், மா, புள் என்பவை வான்தோற்றத்தின் இயற்கைப் பொருள்களாகும். இவை பற்றி ஜெயமோகன் அவர்கள் தமது புதினங்களில் குறிப்பிட்டுள்ளார். இது குறித்த ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## பிரபஞ்சம்

"நிலம் தீ நீர் வளி, விசுப்பொடு ஐந்தும்

கலந்த மயக்கம் உலகம்" (தொல்காப்பியம், மரபியல் நூ.91)

என்கிறார் தொல்காப்பியர்.

நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்ற ஐம்புதங்களால் உருவானதே உலகம் என்பதை,

"நீர், நிலம், தீ, வளி, விசும்போடு ஐந்தும்

அளந்துகடை அறியினும்…" (பதிற்றுப்பத்து, பா.24)

என வரும் பதிற்றுப்பத்தால் அறியலாம்.

மேற்கண்ட ஐம்புதத் தத்துவங்களை தமது புதினங்களில் குறித்துள்ளார். ஜெயமோகன் அவர்கள் இந்த பிரபஞ்சம் சிவப்பு நிறங்களால் மிளிர்கிறது என்கிறார் ஆசிரியர்.

அந்த சிவப்பில் மட்டுமே உயிரிருக்கிறது என்பதை,

“இந்தப் பிரபஞ்சத்தில் இருக்கும் ஒரே உண்மையான நிறம் சிவப்பு தான், மற்ற நிறங்கள் உதிலும் உயிரே இல்லை. சிவப்பில் மட்டும் தான் உயிர் இருக்கிறது.” (ஜெயமோகன், 2010)

எனும் கூற்றில் காணலாம். வானம் நில நிறம் கொண்டது ஆனால் இரவில் நீல நிறத்தைக் காணமுடியாது. மேலும், இரவு என்பதே நீலநிறம் தான் என்பதை,

“இரவில் நீலம் சரியாகத் தெரியாது. ஏனென்றால் இரவே நீலநிறமானது தானே?” (ஜெயமோகன், 2010) எனும் பகுதி சுட்டும்.

இந்த பிரபஞ்சத்தின் தோற்றம், அதன் இயக்கம் பிரபஞ்சத்தின் பரந்து விரிந்த தன்மைகளை இந்திய மதங்களோடு ஒப்பிட்டு பிரபஞ்ச தோற்றத்திற்குக் காரணம் கடவுளே என்றும் அதனாலேயே பிரபஞ்சத்தை கடவுளாக வழிபடும் மரபு முக்கியமான மூன்று இந்திய மதங்கள் உண்டு என்கிறார் ஜெயமோகன் அவர்கள். இதனை,

“இந்திய மதங்கள் அறு அவற்றில் பெரு மதங்களள் மூன்றுதான். சைவம், வைணவம், சாக்தம். சாக்தம் பிரபஞ்சத்தில் அலகிலாத ஆற்றலை கடவுளின் உருவமாக வழிபடுகிறது. இரண்டு வகை ஆற்றல்களின் முரணியக்கம் தான் இந்தப் பிரபஞ்சம், செயலாற்றல். அது ஒரு கருத்து. ஒரு துண்டுகைக் காரணம். அவ்வளவு தான் அதை சிவம் என்கிறார்கள். அதனால் உயிர் கொண்டெழுந்து நிலையானது அதுதான். அந்தப் படைப்புக் காரணம், அது தான் சக்தி” (ஜெயமோகன், 2010) என்ற பகுதியில் காணலாம்.

## மலை

‘நாடெல்லாம் கண்ணுக்குத் தெரியும்படி உயர்ந்த மலைச் சிகரங்களைக் கொண்ட (நன்றா என்னும்) குன்றின் நாள் மகிழ் இருக்கையில என்ற பொருள் பதிந்த பாடலில் மலைச் சிகரம் பற்றியும் குன்று குறித்தும் குறிக்கக் காணலாம். இதனை,

“கோடு பல விரிந்த நாடுகாள் நெடுவரை சூடா நறவின் நான்மகிழ் இருக்கை” (ஜெயமோகன், 1990) எனப் பதிற்றுப் பத்து சுட்டுகின்றது.

மலையிடை ஒரு குண்டுக்கல் நின்ற தோற்றம் யானையின் கை மறைந்த தோற்றம் போன்று காட்சியளிப்பதாகக் குறுந்தொகை (111:4-5) கூறுகின்றது. பெண் யானை தூங்குவது போன்றும் (கலித்தொகை 108:40) படுத்துக் கிடப்பது போன்றும் அகம் (269:6) ஒரு துறுகல்லின் மேல் நீண்ட நாட்களாக மழையின்மையால், துகள் படிந்து கிடக்கின்றுது. அதனைக் காண மண்ணும், துகளும் படிந்த யானை போலக் காட்சித் தருகின்றது. (குறுந்: 279:5-7) மேற்கண்ட சங்கப் பாடல்கள் மலைக்குன்றை யானைக்கு உவமித்தது போன்றே ஜெயமோகன் அவர்களும்,

“மலைகளின் சிகரவளைவுகள் யாரோ பேசாமல்

குனித் அமர்ந்திருப்பது போல தோன்றின” (ஜெயமோகன், 2013)

என உவமிக்கிறார்.

கொரட்டி மலை குறித்தும், பொன்னுமணி என்ற பாத்திரம் மூலம் எடுத்துரைக்கின்றார் ஜெயமோகன் அவர்கள் இதனை,

“பொன்னுமணி கொரட்டி வசந்தம் மலைக்கு வந்து சேர்ந்த போது மலையில் மலை ஓய்ந்த முன் வசந்தம் சிவப்புகலந்த தவிட்டு நிறப் புக் குலைகள் ஏந்திய, தழைந்த புற்கள் மார்பளவு உயரத்தில் அடர்ந்திருந்தன. தூரத்தில் ஓரிரு மரங்களாகத் தெரந்து, திசையை மறைந்த அடர்ந்த காடுகள்” (ஜெயமோகன், 2013)

எனும் பகுதியில் காணலாம்.

மலைக்குன்றுகள், மலைத் தொடர்கள் ஆகியவை இளநீள மையால் எழுதப்பட்டவை போன்று தோற்றம் அளிப்பதையும் மேகமெல்லாம் மலைக்குப் பின்னால் விழுவது போன்ற கற்பனை வளத்தையும் ஜெயமோகன் அவர்கள் கீழ்வரும் பகுதியில் குறிப்பிடுகின்றார். இதனை,

"அடிவானில் தெரிந்த பச்சை நிறக் குன்றுகள் வானத்திரையில் இளநீளமையால் எழுதப்பட்டவை போன்ற மலைத்தொடர்கள், வானிலும் பூமியிலும் காற்றிலும் எல்லாம் ஈரம். இதமான குளிராக உடலைத் தருவும் ஈரம் இலைகள் கொட்டி இலைகள் மீது விழும் இரைச்சல்......... ஒளிப்பட்டுக் கூசிய கரிய மேகங்கள் பிரகாசமான பின் நுனிகளுடன் மலைகளுக்குப் பின்னால் சரிந்து விழுந்து கொண்டிருந்தன." (ஜெயமோகன், 2013) என்னும் வரிகளில் குறிப்பிடக் காணமுடிகிறது.

## மணல்

சேர நாட்டிலுள்ள இள மங்கையர் குளிர்ந்த பொருநையாற்றில் பாய்ந்து நீராடிக் கரையிலுள்ள மணலில் பாவையின் உருவைச் செய்து அப்பாவைக்குக் கோட்டுப் பூவைப் சூடி வழிபடுவாராம். இதனை,

"வாலிழை மடமங்கையர்

வரிமணல் புனை பாலைக்குக்

குலவுச் சினைப் பூக்கொய்து" (புறநானூறு, பா.11)

என்னும் செய்யுள் குறிக்கும். மணலில் பாவை செய்து வழிபடும் நிலையை மேற்கண்ட பாடல் சுட்டிக்காட்டியுள்ளனர் ஜெயமோகன் அவர்கள்.

நதியின் "கரை மணலின் மினுங்கள் மேலே கண்ணாடியில் பரதிபலிப்பது போல விடிவெச்சம்" (ஜெயமோகன், 2013) எனக் கூறுகின்றார்.

## நதி

ஓடும் நதியிலிருந்து நீராவி புகை போல எழும் என்பதையும், நதியின் நீர் குளுமை வாய்ந்தது என்றும், நதியின் அடி ஆழம் என்றும் கருமை படர்ந்த காட்சித் தரும் என்பதையும்,

"புனை போல மெல்ல ஆவி எழும் ஜலம் - தொடர்ந்து

.......................................... நீர்த்துளிகள்

ஏந்திய புற்கள் மரக்கிளைகள் பணிசொட்ட,

நீர் சிலிர்க்கும். தண்ணீர் குளிர்ந்து விரட்டிருக்கும்

அடியற்ற ஆழமனப் பிரமமை தருமம் கருமை" (ஜெயமோகன், 2013)

எனும் கூற்றில் உணர்த்துகின்றார் ஜெயமோகன் அவர்கள்.

## ஒலி

இயற்கையாக எழும் பல்வேறு ஒலிகளை சங்கப் புலவர்கள் பதிவு செய்திருக்கின்றனர். பலவகையான பறவைகளின் ஒலியை,

"பல்குறற் புள்ளின் ஒலியெழுந் தாங்சே" (பதிற்றுப்பத்து, 3)

எனப் பதிற்றுப்பத்தும்,

"………………… ….. மா விசும் புகந்து

முழங்குகால் பொருத மரம்பயில்கா" (மதுரைக்காஞ்சி. பா.334 - 335)

என மதுரைக் காஞ்சியும் கூற ஜெயமோகன் அவர்களோ சக்கரத்தின் ஒலியும், சவுக்கு ஒலியும், சப்பாத்துகள் விசும் ஒலியும் என்று இயற்கை ஒலிகளைப் பதிவு செய்துள்ளார். இதனை,

"கரண்டிகளும் பாத்திரங்களும் மோதிக்கொள்ளும் ஒலி. உடைகள் சரசரக்கும் ஒலி, சப்பாத்துக்கள் மரத்தரையில் உரசும், மோதும் ஒலி. ஆபூர்வமாக ஆழ்ந்தல் அந்தரங்கமான பேச்சொலிகள்" (ஜெயமோகன், 2011)

"காலையில் இருந்து சக்கர ஒலியும் சவுக்கொலியும் குளம் பொலியும் இணைந்த முழுமுழக்கம் கேட்டுக் கொண்டிருந்தது" (ஜெயமோகன், 2011) எனும் கூற்றுகளில் காணலாம்.

மருத நிலத்து மக்கள் எழுப்பும் பல்வேறு ஒலிகளை மாங்குடி மருதனார் தொகுத்துக் கூறுகிகன்றார். வயலுழவர் தம் பணிகளுக்கிடையில் உண்டாக்கும் ஆராவராமும் ஏற்றப்பாட்டும் உழவுப்பாட்டும் பாடப்படுகிறது. இந்த மக்கள் ஒழுப்பும் ஒலிகளையும், இயற்கை ஓசையினையும்,

"அள்ளல் தங்கிய கபமுழு முழுமம்

கள்ளார் களமர் பெயர்க்கும் ஆர்ப்பே

மீன் சீவும் பாண் சேரியோடு

மருதம் சான்ற தண்பளை" (பத்துப்பாட்டு பா.வ 259)

என்ற செய்யுளில் காணலாம். ஜெயமோகன் அவர்களும் வேலை செய்யும் போது மனிதாகளின் போச்சோலிகளை பதிவு செய்துள்ளார். இதனை,

"உள்ளே ஆட்கள் வேலை செய்யும் பேச்சொலிகள்

கேட்டன. ஆனால் மிக மெல்லிய ஒலிகள், நீருக்குள்

முழ்கும் போது மேலே கேட்கும் ஒலிகளைப் போன்

முனகல்கள், மூச்சொலிகள், எடை தூக்குள் ஒலிகள்" (ஜெயமோகன், 2000)

எனும் பாடல் பகுதிகள் சுட்டிக் காணலாம்.

ரப்பர் மரங்களின் அசைவால் ஒலி எழுப்புவதை,

"கிளைகள் நெருங்கி இலைகள் கரை போல அடர்ந்து படர்ந்திருந்தன. காற்றின் பாய்ச்சலில் இலைப்பரப்புக்கு மேலே சலசலப்பொலிய கேட்டது." (ஜெயமோகன், 2011)

என்னும் வரிகளில் புலப்படுத்துகின்றார் ஜெயமோகன் அவர்கள். மேலும்,

"இலைகளின் ஒலி தவிர வேறு ஒலியே இல்லை முற்றுத்து ஈரத்தில் நிழல்கள் பிரதிபலித்து அசைந்த" (ஜெயமோகன், 2011)

என்பதை இலைகளின் ஒலியை குறிப்பிடுகிறார் ஆசிரியர்.

## மலர்கள்

மலர்களின் மணம் பரப்பும் பாடல்களை சங்க இலக்கியங்களில் காணலாம் மலரின் நனை, அரும்பு, போது செம்மல் என்ற அத்துணை நிலகளையும், அவற்றின் மணங்களையும் சங்கப் பாடல்கள் பதிவு செய்துள்ளது.

"மழைக் காலத்தே மலரும் பித்தகம் பற்றி

மலிபெயற் கலித்த மாரிப் பித்திகம்" (அகனாநூறு)

என அகநானூறும்,

கோடைக் காலத்தே மலரும் மாதிரியினை,

"வேனிற் பாதிரிக் சானி மாமலர்" (குறுந்தொகை பா.147)

எனும் அடியும் சுட்டிக் காணலாம்.

ஜெயமோகன் அவர்களும் பல வகையான மலர்கள் குறித்து தமது நாவல்களில் குறிப்பிடுகின்றார். எரியும் மஞ்சள் விளக்குகள் பூசணி மலர்கள் போல் காட்சி தருவதை,

"சிறிய பூசணி பூக்கள் போல எரிந்த மஞ்சள் விளக்குகளுக்குக்கீழே" (ஜெயமோகன், 2011)

என்ற வரிகளில் குறிக்கப்பெற்றுள்ளார்.

துளி வரிகளில் அரளி மலர்களை கடவுளோடும், பக்தியோடும் தொடர்பு கொண்டது. கண்னியாகுமரி தெய்வம் துளசிக்கதிர் சூடியிருப்பதை,

"தேடிய பாக்கிறதுக்கே. அது ஒரு அனுபவம் என்னமோ ஒரு. ஒரு……. எப்படி சொல்றது! தேவி குழிச்சிட்டு தலைல துளசிக்கதிர் சூடி ஈரம் மாறாமவாறத பாக்கிறது மாதிரி….." (ஜெயமோகன், 2011)

என்ற பகுதி குறிக்கும். மேலும்,

"நாராயணன் நீளவாட்டில் சந்தனக் கீற்று அணிந்து காதில் துளசி அரளி மலர்சூடி பக்தி கனிந்து இருந்தார்" (ஜெயமோகன், 2011)

என்பதில் துளசியும், அரளியும் தெய்வ வழிபாட்டில் முக்கிய இடம் பெறுவதை உணர்த்துகின்றது.

"ஒரு புதர் அருகே நின்றார். அந்தச் செடி இருளில் நன்றாகத் தெரியவில்லை. ஆனால் புவை நான் பார்த்துவிட்டேன். சப்பாத்திக் கள்ளிப் புவைப்போல கீழ்நோக்கிக் குனித்து நின்றது. வெண்ணிறமான இதழ்கள் ஒரு சிறு வெண்கொற்றக் குடை" (ஜெயமோகன், 2011)

என்றுரைக்கின்றார்.

வன தேவதைக்குப் பிடித்தமான மலர் நிசாகந்தி என்றும் மலர் என்பதை,

"வனயட்சி நிசாகந்தி புவை சூடியிருப்பாள்னு சொல்வாங்க" (ஜெயமோகன், 2011)

என்ற கூற்று உணர்த்தும்.

நிசாகந்தினா என்ற செடியில் பூக்கும் பூ ஒரு வித மயக்கத்தை வரவழைக்கும் என்பதையும் இது இரவிலேதான் மலரும் என்பதையும்,

"நிசாகந்தினா ஒரு பூச்செடி, இரவிலே மணக்கும் செடீன்னு அர்த்தம். ராத்திரியிலேதான் பூக்கும் ராத்திரியிலே தான் மணக்கும். கள்ளிப்பாலை மாதிரியே இதுவும் மயக்கம் வர்ர மாதிரியே மணக்கும்" (ஜெயமோகன், 2011)

எனும் பகுதியில் சுட்டும் ஜெயமோகன் அவர்கள. இது இரவிலேயே பூப்பதாலதான் இதற்கு நிசாகந்தின்னா என்ற பெயர் அந்தது என்பதையும் கூறுகின்றார்.

மேலும், நிசாகந்தின்னா செடியிலிருந்து,

"ஏதோ வாசனைத் தைலம் மாதிரி நாசிச் சருமத்தைச் சீண்டுப் நறுமணம்… இது ஒரு மாதிரி கள்ளிச்செடி……… காக்டேஸியா குடும்பத்தில் ஒன்னு. இதுக்கு இங்கிலிலே டச் மேன்ஸ் பைப்பனு பேரு" (ஜெயமோகன், 2011) எனக் குறிப்பிடுகின்றார் ஜெயமோகன் அவர்கள்.

## முடிவுரை

**ஐம்பூதங்களால் உருப்பெற்ற இப்பிரபஞ்சம் குறித்தும் பிரபஞ்சத்தையே அதாவது இயற்கையையே கடவுளாகக் கருதி வழிபடும் இந்திய மதங்கள் குறித்தும் விளக்கியுள்ளார் ஜெயமோகன்அவர்கள். மேலும், இயற்கைப் பொருள்களான மலை, மணல், நதி, மலர்கள் மற்றும் ஒலிகள் பற்றியும் ஜெயமோகன் அவர்கள் தன்னுடைய படைப்பில் கையாண்டுள்ளதை இக்கட்டுரையின் வாயிலாக அறியமுடிகிறது.**

## References

Jeyamohan, (1990) Rubber, Natrinai Pathipagam, Chennai, India

Jeyamohan, (2000) Kanniyakumari, Kavitha Pathipagam, Chennai, India

Jeyamohan, (2010) Iravu, Tamilini, Chennai, Inida

Jeyamohan, (2010) Ulogam, Kilaku Pathipagam, Chennai, India

Jeyamohan, (2011) Anal Katru, Tamilini, Chennai, India

Jeyamohan, (2013) Vellaiyanai, Eluthu Pathipagam, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Authors 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License